6

<u>பதிவு அஞ்சல் மூலமாக</u>

அனுப்புநர்

**திரு.S. ஞானமணி, ஏ.எம்.ஐ. இ.,**
நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்,
வேலூர் மண்டலம்,
2–வது தளம், முன்னாள் படைவீரர் மைய வளாகம், கோட்டை சுற்று சாலை, பெரியார் பூங்கா எதிரில்,
வேலூர் – 632 001.
ddtcpvlr9@yahoo.com
Office ph.No.0416 – 2225344.

பெறுநர்

தனி அலுவலர் / வட்டார வளர்ச்சி அலுவலர்,
சேவூர் ஊராட்சி,
காட்பாடி ஊராட்சி ஒன்றியம்,
காட்பாடி வட்டம்,
வேலூர் மாவட்டம்.

**<u>ந.க.எண்.5753/2018/வேம3, நாள் : 12.06.2019</u>**

அய்யா,

பொருள் : மனைப்பிரிவு – நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அலுவலகம், வேலூர் மண்டலம் – வேலூர் மாவட்டம் – காட்பாடி வட்டம் – காட்பாடி ஊராட்சி ஒன்றியம் – சேவூர் ஊராட்சி / கிராமம், சர்வே எண். 488/1பி–ல் **1.37** ஏக்கர் பரப்பில் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப இசைவு அளித்தல் – தொடர்பாக.

பார்வை :

1. மனுதாரர் திரு.A.ஜோசப் சாம்ராஜ், அவர்களின் கடிதம் நாள். 22.10.2018. (இவ்வலுவலகத்தில் பெறப்பட்ட நாள். 01.11.2018.)
2. அரசாணை எண்.71, ஊரக வளர்ச்சித் துறை(C2), நாள்.16.06.2003.
3. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை.2 அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.14619/88சிபி, நாள்.27.4.1988
4. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை–2 அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.40483/2000/எல்ஏ, நாள். 07.11.2002
5. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை–2 அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.7978/2012/எல்ஏ2, நாள். 19.04.2012.
6. அரசாணை எண்.138, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள்.4.06.2004.
7. அரசாணை எண்.79, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள்.04.05.2017.
8. இவ்வலுவலக கடிதம் இதே எண். நாள். 25.02.2019 (சாலை அமைப்பு வரைபடம் ஒப்புதல் அளிக்கப்பட்ட நாள்)
9. சாலை மற்றும் பூங்கா மனைப்பிரிவு வரைபடத்தில் உள்ளவாறு உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்ட நாள். 18.03.2019.

(7)

10. வட்டார வளர்ச்சி அலுவலர், காட்பாடி ஊராட்சி ஒன்றியம் அவர்களின் கடிதம் ந.க.ஆ2/541/2019, நாள். 31.05.2019.
11. இவ்வலுவலக கடிதம் இதே எண். நாள். 07.06.2019 (நுன்னிலை வரி கட்டணம் கோரப்பட்டது)
12. மனுதாரர் கடிதம் (நுன்னிலை வரி கட்டணம் செலுத்தப்பட்டது) நாள்.07.06.2019

..............

வேலூர் மாவட்டம், காட்பாடி வட்டம், காட்பாடி ஊராட்சி ஒன்றியம், சேவூர் ஊராட்சி / கிராமம், சர்வே எண். 488/1பி–ல் 1.37 ஏக்கர் பரப்பில் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு அனுமதி கோரி பார்வை 1–ல் காணும் கடிதத்துடன் இணைத்து பெறப்பட்ட ஆவணங்கள் யாவும் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப இசைவு அளிக்கப்படுகிறது.

தொழில்நுட்ப ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்திற்கு **ம.வ/ந.ஊ.து.இ.(வேம) எண்: 430/2019** என எண்ணிடப்பட்டு மனைப்பிரிவு வரைபடம் மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகள் நடவடிக்கைக்காக அனுப்பி வைக்கப்படுகிறது.

பார்வை 4–ல் சுட்டியுள்ள நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கைகளில் தெரிவித்துள்ளபடி தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மனைப்பிரிவு நிபந்தனை வரிசை எண்.16–ன்படி பூங்காவிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பொது ஒதுக்கீடுகளையும் மற்றும் சாலைகளுக்கென ஒதுக்கப்பட்ட இடத்தையும் தானபத்திர ஆவண எண்.3357/2019, நாள். 18.03.2019–ன் மூலம் காட்பாடி ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒப்படைக்கப்பட்டு அதற்கான விவரம் பார்வை 10–ல் காணும் கடிதம் மூலம் பெறப்பட்டுள்ளது. **தனிஅலுவலர் / வட்டார வளர்ச்சி அலுவலர் (கிஊ), சேவூர் ஊராட்சி, காட்பாடி ஊராட்சி ஒன்றியம்** அவர்களால் உத்தேச மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் அளிக்கப்பட வேண்டும். மேலும், மனைப்பிரிவு நிபந்தனைகள் 19 (இ) மற்றும் 19(உ) குறித்து உறுதி செய்த பின்னரே ஒப்புதல் அளிக்க வேண்டும்.

மனைப்பிரிவிற்கு **தனிஅலுவலர் / வட்டார வளர்ச்சி அலுவலர் (கிஊ), சேவூர் ஊராட்சி, காட்பாடி ஊராட்சி ஒன்றியம்** இறுதி ஒப்புதல் அளிக்கப்படும்போது மனைப்பிரிவு நிபந்தனை எண்.19(ஈ)–ன்படி அவ்வாணையின் நகலினை உடனடியாக இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**தனிஅலுவலர் / வட்டார வளர்ச்சி அலுவலர் (கிஊ), சேவூர் ஊராட்சி, காட்பாடி ஊராட்சி ஒன்றியம்** ஒப்புதலுடன் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தினை சம்பந்தப்பட்ட பத்திரப்

பதிவு அலுவலகத்திற்கு தகவலுக்கும் உரிய நடவடிக்கைக்கும் அனுப்புமாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மனைப்பிரிவு வரைபடங்கள் மற்றும் நிபந்தனைகள் பெற்றுக்கொண்டமைக்கான ஒப்புகைச் சான்று உடன் அனுப்பி வைக்குமாறு **தனிஅலுவலர் / வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), சேவூர் ஊராட்சி, காட்பாடி ஊராட்சி ஒன்றியம்** கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

மேலும், மனுதாரர் மேற்கண்ட உத்தரவு **தனிஅலுவலர் / வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), சேவூர் ஊராட்சி, காட்பாடி ஊராட்சி ஒன்றியம்** அவர்களை அணுகுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

12/6/15

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்,
வேலூர் மண்டலம்.

**இணைப்பு–வரைபடம் மற்றும் மனைப்பிரிவு**
நிபந்தனை ( 2 ) நகல்கள்

**நகல் :**

1) நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களுக்கு செயலாணை மறறும் வரைபடம்–1 பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
2) நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், வேலூர் மண்டலம் அவர்களுக்கு செயலாணை மற்றும் வரைபடம்–1 இணைக்கப்பட்டுள்ளது.

**நகல் :**
திரு. A. ஜோசப் சாம்ராஜ்,
எண். 2, Flat – E, Youngman Flats,
15 வது கிழக்கு மெயின் சாலை,
காந்தி நகர்,
காட்பாடி,
**வேலூர் – 632106.**

16

தனி அலுவலர்/வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ) சேவூர் ஊராட்சி அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை: திருமதி.எஸ்.பானுமதி, எம்,ஏ.,

ந.க.ஆ2/541/2019

நாள் :28.06.2019

பொருள் : உத்தேச குடியிருப்பு மனை பிரிவு - காட்பாடி ஊராட்சி ஒன்றியம் - சேவூர் ஊராட்சி - சர்வே எண் 488/1பி-ல் - 1.37 ஏக்கர் பரப்பில் அடங்கியுள்ள உத்தேச குடியிருப்பு மனைபிரிவில் 1 முதல்21 மனைகள் நிபந்தனைகளுக்குட்பட்டு ஒப்புதல் அளித்து உத்திரவிடுதல் - சார்பாக.

பார்வை : 1.வேலூர், நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்(பொ) அவர்களின் கடிதம் ந.க 5753/2018/வேம3 நாள்:13.03.2019.

2.அரசானை எண் G.O (Ms)No:79 Housing & Urban Development (UD4(3)) Department Dated: 04.05.2017.

3.காட்பாடி வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ) அவர்களின் கடிதம் ந.க ஆ2/541/2019 நாள்:24.06.2019.

4.சேவூர் ஊராட்சியின் தீர்மான எண். 07 நாள்:30 .05.2019.

5.காட்பாடி சார்பதிவாளர் அவர்களின் வழிகாட்டி மதிப்பு நாள்:26.06.2019.

6.காட்பாடி வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ) கடித ந.க ஆ2/541/2019. நாள்:26.06.2019.

7.நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், வேலூர் (வேலூர் மண்டலம்) எண். 430/2019.

8. வட்டாச்சியர், காட்பாடி ஒ.மு. ஆ1/3614/2018, நாள்: 28.09.2018.

*******

**ஆணை:**

காட்பாடி ஊராட்சி ஒன்றியத்திறக்கு உட்பட்ட சேவூர் ஊராட்சியில் சர்வே எண். 488/1பில் அடங்கியுள்ள மனைபிரிவுகளுக்கு தொழில் நுட்ப அனுமதி அளித்து பார்வை 1ல் காணும் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பார்வை 3 மற்றும் 4 ல் காணும் சேவூர் ஊராட்சியின் தீர்மானத்தின்படி ஊராட்சிக்கு பூங்கா மற்றும் சாலை பயன்பாட்டிற்காக 5030 சதுரஅடி தானமாக பெறப்பட்டது.

ஊராட்சிக்கு செலுத்தப்பட வேண்டிய நிலம் மாற்றம் செய்வதற்கான வளர்ச்சி கட்டணம் ரூ. 8426/- தொகை உரிய அரசு தலைப்பில் செலுத்தப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் உத்தேச குடியிருப்பு மனைபிரிவு நிபந்தனைகளுடன் 19(இ) மற்றும் 19(ஊ) குறித்து காட்பாடி வட்டாச்சியரிடமிருந்து பார்வை 8ல் கண்டுள்ளவாறு தடையில்லா சான்று பெறப்பட்டுள்ளது.

எனவே, உத்தேச குடியிருப்பு மனைபிரிவு சர்வே எண். 488/1பி ல் 1.37 ஏக்கர் பரப்பில் அடங்கியுள்ள 1 முதல் 21 வரையுள்ள மனைகளுக்கு நிபந்தனையின் அடிப்படையில் ஒப்புதல் அளித்து உத்திரவிடப்படுகிறது.

28/6/19

தனிஅலுவலர்/வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ),
சேவூர் ஊராட்சி,
ஊராட்சி ஒன்றியம், காட்பாடி.

**பெறுநர்:**

திரு.A.ஜோசப் சாம்ராஜ், எண்.2, Flat-E, Youngman Flats,
15வது கிழக்கு மெயின் சாலை, காந்தி நகர், காட்பாடி, வேலூர்-632 006.

**நகல் பணிவு:**

1.உதவி இயக்குநர்(ஊராட்சிகள்), வேலூர் - 9.
2.நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்,
கோட்டை சுற்றுசாலை பெரியார் பூங்கா எதிரில், வேலூர் -1.

**நகல்:**

1.சம்மந்தப்பட்ட மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர், ஊராட்சி ஒன்றியம், காட்பாடி.
2.ஊராட்சி செயலர், சேவூர் ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம், காட்பாடி.
3.சார் பதிவாளர், சார் பதிவாளர் அலுவலகம்,காட்பாடி.
4.ஆ2 இருப்பு கோப்பிற்கு.